நாவிதன்வெளி பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 11 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நாவிதன்வெளி பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 3 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்வேறு நிறுவனங்களினால் பிரதேச சபைக்கு பதினைந்து அலுவலக உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்துக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்குச் சொந்தமான நான்கு உழவு இயந்திரங்களும் இழவைப் பெட்டிகளும் காணப்பட்டபோதிலும் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்துக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரையான காலத்திற்கான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை ரூபா 2,523,081 தொகையை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 14 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டதின் 158ஆம் பிரிவு | சபையின் எல்லைக்குட்பட்ட சகல வட்டாரங்களிலும் ஆதனவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விதி ஒழுங்குகள் | |
| நிதிப் பிரமாணம் 880 | காசு மற்றும் களஞ்சியப் பொருட்கள் நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (இ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 10 கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான கணனிப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,398,010 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 1,172,876 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,570,886 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134ஆம் பிரிவுக்கு அமைய, சபையினால் வருமானங்களை அறவிடுவதற்கான உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகளை கணிப்பீடு செய்து அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடத்திற்கு அண்ணளவாக ரூபா 300,000 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

2.2.2 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்குமான கட்டண அறவீடு

சுபையின் அதிகாரப் பரப்பிற்குள் தொலைத் தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை அறவிடவேண்டிய உரிமைக்கட்டணம் அண்ணளவாக ரூபா 96,000 தொகை சபையினால் இன்று வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையினை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 யூலை 14 ஆம் திகதி வரை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவப் பலவீனம்

யூனெப்ஸ் (UNOPS) நிறுவனத்தினால் புனரமைப்பு செய்த வீதிகளை பராமரிக்கும் சேவைக்கான கொடுப்பனவுகளை வழங்கும் நோக்கத்திற்காக இலங்கை வங்கியில் 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 14 ஆம் திகதி வரை செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும் அதனை அரச கணக்குகள் திணைக்களம் சுற்றுநிருப கடித இலக்கம் 105/98 அமைவாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

பிரதேசத்தில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் சமூகக் குறிக்கோளை அடைந்துகொள்ளும் வகையில் நிர்மாண வேலை ஒப்பந்தங்களை வழங்கும் போது பெறுகை நடைமுறைகளின் படி அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் சங்கங்களை பங்குபற்ற செய்யலாமென கூறப்பட்டபோதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 170,000 பெறுமதியான இரண்டு ஒப்பந்த வேலைகளை வழங்கும் போது பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் சபைத் தீர்மானத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இரண்டு சங்கங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

3.3 உரிய சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளாது 2010ஆம் ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனத்தால் நிர்மானிக்கப்பட்டு பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்ட ரூபா 3,000,000 பெறுமதியான திண்மக் கழிவகற்றல் நிலையமானது பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக இன்றுவரை செயற்படாது பயன்படாது காணப்படுகின்றது.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கிக் கொள்ளவேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

கீழ் வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) முற்பணங்களின் அறவீடு

(உ) ஒப்பந்த நிர்வாகம்